# பொதுக்காலம் 3ஆம் வாரம் - ஞாயிறு

## மூன்றாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

அன்பார்ந்தவர்களே! பொதுக்காலம் மூன்றாம் ஞாயிறு திருப்பலியில் பங்கேற்க வந்திருக்கும் அனைவருக்கும் எங்கள் அன்பான வணக்கங்கள்.

இன்று நாம் அரசியல் தலைவர்கள், நடிகர்கள், விளையாட்டு வீரர்கள் இவர்களை நம் வாழ்வின் மையமாகக் கொண்டு, அவர்கள் திருவடி வணங்கி, அவர்கள் ஆணையிடுவதை செய்து, அவர்களின் பொய்யான வழியை பின்பற்றிச் சென்று கொண்டிருக்கின்றோம். ஆனால், நம் வாழ்வில் நாம் யாரை பின்பற்றி வாழ வேண்டும், யாரை மையமாகக் கொண்டு வாழ வேண்டும் என்பதை இன்றைய நற்செய்தி நமக்கு அறிவுறுத்துகிறது.

இறைமகன் தன்னை பின்பற்றி வர அழைப்பு விடுக்கின்றார். ஆண்டவர் கொடுத்த கட்டளைகளில் மிகமிகக் கடினமான ஒன்று, "என்னைப் பின்செல்லுங்கள்" என்பது. "என்னைப் பின்செல்" என்றதும் பேதுருவும், யாக்கோபும், யோவானும், அந்திரேயாவும் உடனே அவரைப் பின்பற்றினர். இயேசுவிடம் எந்த பதவியும், மாடமாளிகைகளும், பொருட்செல்வங்களும் கிடையாது. தலைசாய்க்கக் கூட இடமில்லாத ஒரு மனிதர். அவரை எப்படி பின்செல்வது, நம் குடும்பத்தின் நிலை என்ன, நம்முடைய வாழ்வு எப்படி அமையும் என்பது பற்றியெல்லாம் அவர்கள் எண்ணவில்லை. உடனே சற்றும் தாமதியாது அவரைப் பின்பற்றினார்கள்.

அவர் சீடர்களை தேர்ந்தெடுக்கும் முன்பு தந்தையிடம் செபித்து பின்பே தேர்ந்தெடுக்கின்றார். ஏனெனில் இறைதிருவுளம் நிறைவேற்றும் சீடத்துவப்பணி அத்துணை மேன்மையானது என்பதை உணர்ந்தவராகச் செபித்துத் தேர்ந்தெடுக்கின்றார்.

"நம்மோடு இருக்கவும், நற்செய்தியை அறிவிக்கவும், நோய்களைக் குணப்படுத்தவும், பேய்களை ஓட்டவும், மனிதர் மீது பொறுப்பு மிக்க அதிகாரம் கொண்டிருக்கவும்" நம்மை அழைக்கின்றார். அவரைப் பின்பற்ற வேண்டுமென்றால் அனைத்தையும் இழக்கும் மனம் வேண்டும். துன்பங்களையும், பாடுகளையும், ஏன் தன் உயிரையும் பொருட்படுத்தாக உறுதியான, விசுவாசம் நிறைந்த மனம் வேண்டும். அவரே நம் வாழ்வின் மையமாக வேண்டும். ஆனால்  அனைத்திற்கும் விண்ணகத்தில் கைம்மாறு கிடைக்கும். நாம் ஒவ்வொருவரும் அவரை உண்மையாக பின்பற்றினால் நமக்குள் பிரிவினைகளுக்கு இடமேயில்லை.

இன்று நம் ஒவ்வொருவரையும் நாம் பணிசெய்யும் இடத்திலேயே அவரை பின்செல்ல அழைப்பு விடுக்கின்றார். ஆகவே, நாம் ஒவ்வொருவரும் நமது பங்களிப்பை கொடு;ப்போம். அவரின் அன்புப் பணியை அவனியிலே முழுமையாக்கிட, பலரை அவரிடம் கொண்டு வர எல்லாருக்கும் எல்;லாமாகிடுவோம். "இனி வாழ்வது நானல்ல, கிறிஸ்துவே என்னில் வாழ்கிறார்" என்பதை வாழ்வாக்கிட வரம் வேண்டி இப்புனிதத் திருப்பலியில் நம்மையே அர்ப்பணித்திடுவோம்.

## மன்றாட்டுகள்:

*பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

1. தாயும், தந்தையுமான இறைவா,

உம் பணிக்காய் நீர் தேர்ந்தெடுத்து, அர்சித்திட்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், அருட் சகோதரிகள். துறவறத்தார் அனைவரும், தங்கள் பணிவாழ்வில் உமதன்;பு வாழ்வை, வார்த்தையாக இல்லாமல் வாழ்வாக பிரதிபலித்து, முன்மாதிரியான சாட்சிய வாழ்வு வாழந்து, மக்களை நல்வழியில் வழிநடத்தி, இறையாட்சியை எங்கும் வளரச் செய்திட, தூய ஆவியின்; ஆற்றலையும், வல்லமையையும் நிறைவாகப் பொழிந்து, காத்திட வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

2. அரணும், கோட்டையுமான இறைவா,

எங்கள் வாழ்வில் வரும் துன்பங்கள், துயரங்கள், சோதனைகளைக் கண்டு, மனம் சோர்ந்து, தளர்ந்து, வாழ்வை முடித்துக் கொள்ளும் கோழைத்தனமான, முட்டாள்தனமான முடிவுகளை எங்கள் மனதிலிருந்து அகற்றி, நீர் எங்களோடு என்றும் உடனிருக்கின்றீர், பயணிக்கின்றீர், எங்கள் வாழ்வை வளமாக்குவீர் என்ற ஆழமான விசுவாசத்தை, நம்பிக்கைளை நாங்கள் பெற்று, வாழ்வின் பயணத்தை உம் கரம் பிடித்து, நடந்திடக் கூடிய உறுதியான உள்ளத்தைத் தந்தருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

3. உலகின் ஒளியே இறைவா,

வளர்ந்து வரும் இளைய தலைமுறையினரை உம்மிடம் ஒப்புக் கொடுக்கின்றோம். இந்த உலகம் காட்டும் மாயக் கவர்ச்சியான பணம், பதவி, புகழ், மது, மாது என்ற போதையில் தங்கள் வாழ்வை தொலைத்திடாது. தடம் புரண்டிடாது, உண்மை இறைவன் உம்மை விட்டு விலகி, பாவத்திலே வீழ்ந்திடாது, இருளின் ஆட்சிக்குரிய தவறான செயல்களிலிருந்து விடுபட்டு, ஒளியின் ஆட்சிக்குரிய செயல்களை உணர்ந்து, அதன் வழியில் தங்கள் வாழ்வைத் தொடர்ந்திடக் கூடிய தெளிவான மனதினைத் தந்தருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

4. வாழ்வு வழங்கும் வள்ளலே இறைவா,

அன்று வயது முதிர்ந்த சாரா, அன்னா, எலிசபெத் ;இவர்களின் கண்ணீரின் வேண்டுதல்களை ஏறெடுத்து, அவர்களுக்கு மக்கட்பேற்றினை அளித்தீரே, இன்று திருமணமாகி பல ஆண்டுகள் கடந்து, குழந்தைச் செல்வத்திற்காக ஏங்கித் தவிக்கும் தம்பதியரின் வேண்டுதல்களை கண்ணோக்கிப் பாரும். அவர்களின் கண்ணீரை கண்ணுற்று, அவர்களுக்கு நல்ல மக்கட்பேற்றினை அளித்து, அவர்கள் அக்குழந்தையை உமக்கும், இச்சமூகத்திற்கும் உகந்தவர்களாக வளர்த்து ஆளாக்கிடக் கூடிய, பொறுப்புள்ள பெற்றோர்களாக வாழந்திட வரமருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

5. இரக்கத்தின் ஊற்றே இறைவா.

வறுமை, ஏழ்மையினால் துயருறும் மக்களுக்கு, அவர்களின் தேவைகளையறிந்து, உதவிடவும், எங்களிடம் இருப்பதை, இல்லாதவர்களோடு பகிர்ந்து வாழவும், விபத்து, ஆபத்துக்களில் சிக்;கித் தவிப்பவர்களை கண்டும் காணாததுபோல், "நமக்கேன் வம்பு" என விலகிச் செல்லாமல், நல்ல சமாரியனைப் போல் உடனிருந்து உதவிடவும், அநீதிகளைக் கண்டு, தட்டிக் கேட்காமல், கோழைத்தனமாக வாழாது, தவற்றினைச் சுட்டிக் காட்டி, நீதியை நிலைநாட்டவும் கூடிய, துணிவு நிறைந்த உள்ளத்தை தந்தருள வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

**மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.**

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com